ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–30

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த திருத்தச் சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–9–1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13.31 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. சென்னை-42, வேளச்சேரி சமூக தொண்டு நிறுவனத்திற்குச் சொந்தமான எம்.எஸ். என் 333 பதிவு எண். கொண்ட மோட்டார் வாகனம் தொண்டு நோக்கத்திற்காக பயன்படுத்தும் வரை அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சாதாரண வரி விகிதத்திலிருந்து நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போ.) துறையின் 16–7–1992 ஆம் நாளிட்ட 1143 ஆம்

1992 செப்டம்பர் 22]

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

71. கோவை, எலிடா குழந்தைகள் இல்லத்திற்கு சொந்த மான டி.என். 37/பி 599 பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனம் தொண்டு நோக்கத்திற்காக பயன் படுத்தும் வரை, அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சாதாரண வரி விகிதத்திலிருந்து நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போ) துறையின் 16-7-1991 ஆம் நாளிட்ட 1138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

72. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1991 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை (எண் 1) (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

73. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான இருபத்தோறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

74. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 19-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).

75. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.) (தமிழ்).

76. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

8. 1992 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (எழுபத்தாறாவது திருத்த) சட்ட முன் வடிவு மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு.